முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1627

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.03.2024**, புதன்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கனே
பிரணவக் குடில் படைத்த தேசிகனே
சரவணச் சுடரேற்றி உலகோரெல்லாம்
சற்குருவாய் உன் வழியில் ஞானம் தேறிவர அருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனே ஆறுமுக ஞானியே
ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது சால் திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 30 ம் நாள், 13.03.2024, புதன்கிழமை)
3. தன்னிலே அரங்கன் சக்தி பெருகவே
தணிகாசலன் யானும் ஆற்றலாக இறங்கி
அண்ணலுக்கு அனுதினம் சக்தி ஊட்டி வருகின்றேன்
அமுதுவழியும் அரங்கனுக்கு தரக்கூடிய அனைத்து சூட்சுமசக்திகள் வழியும்
4. ஆறுமுகன் யானே ஆற்றல் கூட்டுகின்றேன்
அற்புதம் பட அரங்கன் வழி ஏற்று அகிலத்தார் ஞானம் பயின்றுவந்தால்
வரமென இந்த கலியுகத்தில்
வல்லமைமிக்க ஞானிகள் படை பெருகி
5. பெருகியே உலகம் ஞானலோகமாக
பிரணவ சக்திகொண்ட தர்மலோகமாக
சரவண ஜோதி ஆளுகின்ற
சத்திய ஜோதி அமைப்பின் களமாக மாற்றம் கண்டு
6. கண்டுமே உலகம் ஞான ஆட்சிப்பெறும்
கலியுகம் ஞான சித்தர் காலமாக யுகமாக மாறி
அழியாமை பெற்ற மக்கள் மூலம் ஆளுமை பெறும்
அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—